புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

==========================================================================

# பண்பாட்டு நோக்கில் மதுரை வீரன் சாமி கதை

முனைவர் ஜெ. முனுசாமி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்ஆர்எம் கலை அறிவியல் கல்லூரி,
காட்டாங்குளத்தூர் 603 203,

==========================================================================

ஆய்வுச் சுருக்கம்

பாமர மக்களின் வாழ்வியல் களஞ்சியமாகத் திகழும் நாட்டுப்புற இலக்கியம், நாட்டுப்புற மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்ள பெரிதும் துணை நிற்கிறது. குறிப்பாக, நாட்டார் தெய்வ வழிபாட்டின் வழி சாதியப் பண்பாடு, நாட்டார் தெய்வ உருவாக்கம், வழிபாட்டு முறை முதலியனவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. *மதுரை வீரன் சாமி* கதையில் வெளிப்படும் சாதியத்தையும் பெண் அடிமைத்தனத்தையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

குறிச்சொற்கள்

நாட்டுப்புறவியல், நாட்டார் தெய்வங்கள், மதுரை வீரன் சாமி கதை, மதுரை வீரன் அம்மானை, தமிழர் பண்பாடு.

## முன்னுரை

நாட்டார் வழிபாடு என்பது தமிழ்ச் சமூகத்தின் இன்றியமையாத பண்பாடாகத் திகழ்கிறது. அந்த நாட்டார் வழிபாடு தோற்றம் கொள்வதற்கு காரணமாகச் சாதியத்தின் வினையாற்றல் இருப்பதை *மதுரை வீரன் சாமி* கதை மூலம் கட்டுரை ஆராய்கிறது. மேலும், அக்காலத்தில் நிலவிய பெண் அடிமைத்தனத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பண்பாடு : விளக்கம்

"மனிதனுடைய வாழ்நிலைகளில் சாராம்சமாகக் காணப்படுகிற ஒழுகலாறுகள், நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், சுற்றி இருப்பவை பற்றிய உணர்வு நிலைகள் முதலியவற்றைக் குறிப்பது பண்பாடு. சமூகக் குழுக்கள் இனங்கள் நாடுகள் என்ற நிலைகளில் காணப்படும் பல்வேறுபட்ட உறவுகள், கலை அழகியல் வெளிப்பாடுகள், சடங்குகள், வழிபாடுகள் என்று இத்திறத்தனவற்றைக் குறிப்பது பண்பாடு.

இது தூலமானதல்ல; தூலமானவற்றின் மேல் அமைந்த அவற்றின் புலப்பாடுகள். மனிதர்களை இணைப்பது; அதேபோது மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுவது. மரபு சார்ந்தது. அதே போது புதியதைத் தருவித்துக் கொள்வது. தகுதியாகக் காட்டிக் கொள்வது. அடையாளமாக அமைவது"[1] எனப் பண்பாடு குறித்த வரையறையை அளிக்கிறார், தி. சு. நடராசன்.

எந்தவொரு சமூகத்தின் பண்பாட்டிலும் வழிபாடும் சடங்குகளும் பின்னிப் பிணைந்து செயல்படுவதைக் காணலாம். தமிழ்ப் பண்பாட்டிலும் வழிபாடும் சடங்கும் பின்னிப்பிணைந்திருப்பதை நாட்டுப்புற தெய்வங்களின் கதைகளின் வழியாக அறிய முடிகிறது.

## நாட்டார் தெய்வங்களும் சாதியப் பண்பாடும்

சாதியத்தின் பின்புலமின்றி நாட்டார் தெய்வங்கள் தோன்றவும் முடியாது நிலைபெறவும் முடியாது என்பதை நாட்டார் கதைகள், கதைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. *மதுரை வீரன்*

*சுவாமி கதை, காத்தவராய சுவாமி கதை , முத்துப்பட்டன் கதை முதலிய பல நாட்டார் தெய்வக் கதைகள் சாதியத்துடன் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணமுடிகிறது.*

*மதுரை வீரன் சாமி கதை* [2]

*காசி நாட்டின் அரசன் துளசிக்கும் அவனுடைய மனைவிக்கும் பல ஆண்டுகள் குழந்தை இன்றி இறைவனின் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது. அக்குழந்தையின் சாதகத்தைக் கணித்த சோதிடன், அக்குழந்தை வீட்டிலிருந்தால் வீட்டிற்கு ஆகாது; நாட்டில் இருந்தால் நாட்டிற்கு ஆகாது; நாடு அழிந்து விடம். அதனால், அக்குழந்தையைக் காட்டில் விட்டு விடுங்கள் என அறிவுரை கூறுகிறான். அரசனம் அவ்வாறே செய்கிறான்.*

*காட்டில் ஒரு நாகம் பாதுகாத்து வந்த அந்தக் குழந்தையைச் சக்கிலியர் சின்னானின் மனைவி தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று மகிழ்ச்சியுடன் கணவர் சின்னானிடம் காட்டுகிறார். குழந்தையில்லாத மனக்குறையிலிருந்த அவர்கள் அக்குழந்தைக்கு வீரையன் எனப் பெயர் சூட்டி வளர்த்து வருகின்றனர். இச்செய்தி அந்நாட்டு மக்களுக்குத் தெரிந்து விடுகிறது. அரசனுக்குத் தெரிந்தால் குழந்தையையும் தங்களையும் கொன்று விடுவான் என நினைத்து குழந்தையுடன் காசி நாட்டில் இருந்து பொம்மன்ன நாயக்கன் சீமைக்குச் சென்று விடுகின்றனர். அங்குக் குழந்தையை ஒரு வீரனாக வளர்கின்றான்.*

*பொம்மன்னனின் மகள் பொம்மியைக் காவல் காக்கச் சென்றபோது அவள் மீது காதல்கொள்கிறான். முதலில் மறுத்த பொம்மி பிறகு வீரனின் காதலை ஏற்றுக்கொள்கிறாள். அரண்மனையிலிருந்து இருவரும் தப்பிச் சென்று காவேரி ஆற்றங்கரையில் குடியேறுகின்றனர்.*

*இச்செய்தியை அறிந்த பொம்மன்னன் தன் படையுடன் சென்று வீரையனுடன் சண்டையிடுகிறான். அந்தச் சண்டையில் வீரையன் பொம்மன்னனைக் கொன்றுவிட்டு அவன் படையைத் தோற்கடிக்கிறான். பிறகு திருச்சி சென்று மன்னன் விஜயரங்கன் சொக்கநாதன் அரசவையில் பாதுகாவல் பணியில் அமர்கிறான்.*

*அங்குச் சொக்கி என்ற பெண்ணிற்கு மதுரை வீரன் மீது காதல் ஏற்படுகிறது. இருவரும் கூடிக்களிக்கின்றனர். அது தெரிந்து பொம்மி வீரையனுடன் ஊடல் கொள்கிறாள். அதற்கிடையில் விஜயரங்கனுக்கு மதுரை திருமலை நாயக்கரிடமிருந்து அழகர் மலையில் கள்வர் கூட்டம் பெருகிவிட்டதால் அக்கள்வர் கூட்டத்தை ஒழிக்க வருமாறு ஓலை வருகிறது.*

*விஜயரங்கன் வீரையனை மதுரைக்கு அனுப்பி வைக்கிறான். வீரையனும் மதுரைக்குச் சென்று கள்வர் கூட்டத்துடன் சண்டையிட்டு அக்கூட்டத்தினரை அடித்துத் விரட்டுகிறான். கள்வர் கூட்டத்தை அடக்கி ஒழித்ததால் மதுரை வீரன் என மக்களால் போற்றப்பட்டான் வீரையன்.*

*மதுரையில் திருமலை நாயக்கர் அவையில் ஆலாத்தி எடுக்கும் பணியில் இருக்கும் வெள்ளையம்மாள் என்ற பெண்ணிடம் காதல் மயக்கம் கொண்ட வீரையன் அவளைக் கடத்தும் பொழுது திருமலை நாயக்கரின் காவலர்களிடம் அகப்பட்டுக் கொள்கிறான். திருமலை நாயக்கரின் படை வீரர்கள் “நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?” என விசாரிக்கின்றனர். வீரையன் எதுவும் சொல்லாமல் மௌனமாகவே இருந்துவிடுகிறான். ஆதலால் திருமலை நாயக்கரின் ஆணைக்கு இணங்க மாறு கால் மாறு கை வாங்கப்படுகிறான் மதுரை வீரன்.*

*தன்னைத் தொட்டுத் தூக்கிச் சென்றதால் மதுரை வீரனைத் தன் கணவனாக ஏற்றுக் கொள்கிறாள் வெள்ளையம்மாள். மாறு கால் மாறுகை வாங்கப்பட்டவன் மதுரை வீரன் என்பதை அறிந்த திருமலை நாயக்கர் மதுரை மீனாட்சி அம்மனிடம் மனமுருகி வேண்டிக் கொள்ள வெட்டப்பட்ட கைகால்கள் மீண்டும் முளைத்து விடுகின்றன.*

*அதன் பிறகு மதுரை வீரன் தன் மனைவிகளான பொம்மியையும் வெள்ளையம்மாளையும் தீக்குழியில் இறங்க கட்டளையிட , அவர் இருவரும் தீக்குழியில் இறங்கி இறந்துபோகின்றனர். இரு மனைவிக்கும் செய்ய வேண்டிய இறுதிச்சடங்குகளை எல்லாம் செய்துவிட்டு, கடைசியில் மதுரை வீரன் மாடு அறுக்கும் சூரிக் கத்தியால் தன் கழுத்தை அறுத்துக் கொண்டு இறந்து போகிறான்.*

*நாட்கள் செல்ல செல்ல மக்களும் மன்னனும் தன்னை மறந்துவிட்ட நிலையில் மதுரை வீரன் ஆவி வடிவில் மதுரையில் வலம் வருவதைக் கண்டு மக்கள் அச்சப்படுகின்றனர். பிறகு மன்னன் மதுரை வீரனுக்குப் பெரிய அளவில் பூசைகள் செய்து அவரைக் குளிர்விக்கிறார், மன்னர் திருமலை நாயக்கர். அதன் பிறகு மக்களின் வழிபடு கடவுள் ஆனார். கள்ளர் கூட்டத்தை ஒழித்து மதுரையை காத்ததால் வீரையன் மதுரை வீரனாகி இன்றும் குலதெய்வமாக வணங்கப்படுகிறார்.*

கதைத் திரிபு

மதுரை வீரன் தாழ்த்தப்பட்ட சக்கிலிச் சாதியைச் சேர்ந்தவர் என்பதாலும் அவர் வேறு சாதி பெண்களை மணம் புரிவதாலும் அவருடைய பிறப்பை அரச குலத்துடன் தொடர்புப் படுத்துவதாகக் கூறுகிறார், ஆய்வாளர் கோ. கேசவன். மதுரை வீரன் போலவே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த காத்தவராயன் பிறப்பையும் தேவலோகத்தில் இருந்து தோன்றியதாகக் கதை புனைந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். அப்பகுதி பின்வருமாறு:

> "சமூகக் கதைப்பாடல்களில் உயர் குலத்தினரை மணந்து கொண்ட தாழ்த்தப்பட்ட குலத்தினர்களை ஏதேனும் ஒரு நிலையில் உயர்குலத்தினரோடு ஒருங்குசேர பாவித்துக் காட்டப்படும் முயற்சி உள்ளது மதுரை வீரன் பொம்மியை மணந்து கொண்டது ஒரு மரபு மீறல்; எனினும் மதுரை வீரன் காசி நகரத்து துளசி ராசாவின் மகனாகக் காட்டப்படுகிறார். காத்தவராயன் ஆரியமாலாவை ஏற்றுக் கொண்டது ஒரு சமூக மரபு மீறல்; ஆனால் காத்தவராயன் தேவலோகத்தில் இருந்து தோன்றியவன் என்று ஐதீகத்தை துணையாகக் காட்டும் முயற்சி உள்ளது "[3]

பலதார மணம்

பலதார மணம் என்பது தமிழ்ப் பண்பாட்டில் தொல்காப்பியர் காலங்தொட்டே நிலவி வருகிறது.

> "ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்து வாழும் குடும்ப அமைப்பு இது தொல்காப்பியம் பலதார மணக் குடும்பத்தைக் காட்டுகிறது. 'தொன்முறை மனைவி' என முதல் மனைவியும் 'பின்முறை வதுவை' என இரண்டாம் மனைவியும் சுட்டப் பெறுகின்றனர்"[4]

மதுரை வீரனும் பலதார மணத்தில் ஈடுபாடு உள்ளவர் என்பதை மதுரைவீரன் சாமி கதை மூலம் அறிய முடிகிறது. பொம்மி என்ற பெண்ணும் மதுரை வீரனும் மனம் ஒத்துத் காதலித்து உடன்போக்கு சென்று இல்லற நடத்துகின்றனர். சொக்கி என்ற பெண் மதுரை வீரன் மீது காதல் கொள்ள, வீரனும் அவளுடன் மணமுடிக்காமல் உறவு கொள்கிறான். வெள்ளையம்மாள் என்ற பெண் மீது மதுரை வீரன் கொண்ட காதலால் அவளைக் கடத்துகிறான். ஆனால் அவளுடன் இணைந்து வாழ முடியவில்லை. என்றாலும், வெள்ளையம்மாள் மதுரை வீரன் தன்னைத் தொட்டதால் அவனையே கணவனாக ஏற்று வீரனின் கட்டளைக்கு இணங்கி தீக்குழியில் இறங்கி உயிர் துறக்கிறாள்.

தீக்குழி இறங்குதலும் பெண்ணடிமைத் தனமும்

புராதான சமூகம் தாய்வழிச் சமூகமாகப் பெண்ணின் தலைமையில் இருந்திருந்தாலும் தனிவுடைமை உருப்பெற்றக் காலத்திலே ஆணாதிக்கமும் உருப்பெற்றுவிட்டது. மதுரை வீரன் சாதி கடந்து காதல் மணம் புரிந்ததாலே அவருடைய இரு மனைவிகளும் தீக்குழியில் இறங்கி இறக்க நேரிட்டது. பொம்மியும் வெள்ளையம்மாளும் மதுரை வீரன் கட்டளைக்கிணங்கித் தீக்குழியில் இறங்கி உயிர் நீத்தது அக்காலத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனத்தின் உச்சமாக இருந்ததை அறியமுடிகிறது. மதுரை வீரனும் ஆதிக்க சாதியினரால் கொலை செய்யப்பட்டு அவராகவே தற்கொலை செய்து கொண்டதாகக் கதை புனைந்திருப்பதையும் உய்த்துணர முடிகிறது. கணவனின் கட்டளைக்கிணங்கித் தீக்குழியில் இறங்கி உயிர்நீத்த பொம்மையும் வெள்ளையம்மாளும் பத்தினிப் பெண்டிராகப் போற்றப்பட்டாலும் குலதெய்வமாக வழிபடுவதாக மதுரவீரன் கதையில் அறிய முடியவில்லை. இது அக்காலத்தில் நிலவிய ஆணாதிக்கத்திற்குச் சான்றாக அமைகிறது.

பெண்கள் தீயில் பாய்ந்து இறந்தது ஆண்களின் வக்கிரதால் நடந்தது என்கிறார், ஆய்வாளர் பக்தவச்சல பாரதி. அவர் கூற்று பின்வருமாறு :

> " ஆண்களின் வக்கிரத்தால் ஒடுக்குதல்களுக்கு உள்ளாகித் தீயில் பாய்ந்து அல்லது ஆண் வக்கிரத்தை அழித்து தெய்வமான சாமிகள் பல. இவ்வாறு தாய் தெய்வங்களாக மாறிய பெண்கள் சடங்கு நிகழ்ச்சிகள் மூலம் தங்களுக்கு எதிரான ஆண் வக்கிரங்களை அழிக்கும் நிலையில் எழுந்தது ஆண் குறியீடுகளைக் கொண்ட உயிர்பலிகள்"[5]

*ஆண்களின் வக்கிரம் மட்டுமல்ல; சாதியச் சமூகமும் சேர்ந்துதான் தாழ்த்தப்பட்ட ஆண்களைத் காதலித்த குற்றத்திற்காக பொம்மியையும் வெள்ளையம்மாளையும் தீக்குழியில் இறக்கிக் கொன்றிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.*

*முடிவுரை*

*மதுரை வீரன் சாமி கதை மூலமாக நாயக்கர் காலத்தில் தென்தமிழகத்தில் நிலவிய சமூகச் சூழலையும் பண்பாட்டையும் அறியமுடிகிறது. சாதி மறுப்புக் காதலையும் திருமணத்தையும் ஏற்காத நிலையைக் கட்டுக்கதைகளின் மூலம் மறைத்துள்ளதை உய்த்துணர முடிகிறது. மேலும், அக்காலத்தில் நிலவிய பெண் அடிமைத்தனத்தையும் அறிய முடிகிறது.*

> *"மனித மனங்களை தகவமைக்கும் (மனங்களைப் பண்படுத்துவது) பணியை ஆளும் வர்க்கத்துக்காகச் செய்பவை பண்பாட்டு நிறுவனங்களாகும். பண்பாட்டு நிறுவனங்கள் என நாம் குறிப்பிடுவது வீடு, கல்விச்சாலைகள், மதம், சாதி, ஊடகங்கள், கலை இலக்கியங்கள் போன்ற பலவற்றைத்தான்."* [6]

*என்று பண்பாட்டின் அரசியலை குறிப்பிடுகிறார் சா தமிழ்ச்செல்வன்*

*ஆளும் வர்க்கமும் சாதி அமைப்புகளும் சாதிக் கலப்பையும் சாதி ஒழிப்பையும் விரும்புவதில்லை. அவை சாதிய வேறுபாட்டை வளர்க்கவே விரும்புகின்றன. எனவே, அந்த அரசியலைப் புரிந்து கொண்டு காலத்திற்கு ஒவ்வாத சாதியவாதத்தையும் பெண்ணடிமைத்தனத்தையும் விட்டு ஒழித்து சமூக வளர்ச்சியில் முன்னேறிச் செல்ல வேண்டியது இன்றைய அவசியத் தேவையாக உள்ளது.*

*சான்றாதாரங்கள்*

*1 . நடராசன், தி. சு., தமிழின் பண்பாட்டு வெளிகள், ப . 1*
*2. ராஜநாராயணன். கி., நாட்டுப்புற கதை களஞ்சியம் (தலைமை தொகுப்பாளர்), மதுரை வீர சுவாமி கதை, தொகுப்பாளர் சண்முகசுந்தரம், ப. 376*
*3. கேசவன். கோ., நூல் தொகுப்பு 1, தமிழ் சமூக வரலாறு, இலக்கியம், ப.139*
*4. பக்தவச்சல பாரதி, பண்டைய தமிழ்ப் பண்பாடு : மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம், ப. 146*
*5. பக்தவச்சல பாரதி, தமிழர் மானிடவியல், ப. 222*
*6. தமிழ்ச்செல்வன். ச., பண்பாட்டின் அரசியல் (கட்டுரை ஆசிரியர்), பண்பாட்டு வெளி: பன்முகப் பார்வை (கட்டுரைத் தொகுப்பு நூல்), ப. 44*

*துணை நூற் பட்டியல்*

*1 . நடராசன், தி. சு., தமிழின் பண்பாட்டு வெளிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2008*
*2. ராஜநாராயணன். கி., நாட்டுப்புற கதை களஞ்சியம் (தலைமை தொகுப்பாளர்), மதுரை வீர சுவாமி கதை, தொகுப்பாளர் சண்முகசுந்தரம், சாகித்ய அகாடமி, புது தில்லி, 2015*
*3. கேசவன். கோ., நூல் தொகுப்பு 1, தமிழ் சமூக வரலாறு, இலக்கியம், கோ கேசவன் அறக்கட்டளை வெளியீடு, சென்னை, 2022*
*4. பக்தவச்சல பாரதி, பண்டைய தமிழ்ப் பண்பாடு : மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம், அடையாளம், புத்தாநத்தம், 2019*
*5. பக்தவச்சல பாரதி, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002*
*6. தமிழ்ச்செல்வன். ச., பண்பாட்டின் அரசியல் (கட்டுரை ஆசிரியர்), பண்பாட்டு வெளி: பன்முகப் பார்வை (கட்டுரைத் தொகுப்பு நூல்), பாரதி புத்தகாலயம், 2015, சென்னை, 2015*

********* ********* ********** ********* ********* ********** ********** **********